*கவனிக்க.- 2024.02.02 ஆந் திகதிய 2370 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) (தமிழ் மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2371 - 2024 පෙබරවාරි මස 09 වැනි සිකුරාදා - 2024.02.09**

*2371 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 68 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, மாச்சு மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


67 - B 82539 - 353 (2024/02)

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/67804.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NCP/PLC/L02/MNP/L.T.L.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

அநுராதபுர மாவட்டம், மத்திய நுவரகம்பலாத்த பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 282 ஹலகம கிராம அலுவலர் பிரிவின் மீகஹவெவ கிராமத்தின் அண்ணளவான நிலவரைபடத்தின் காணித் துண்டு இலக்கம் 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 02 ஏக்கர், 31 பேர்ச் அளவுடைய அரச காணியினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு ஹபரகமு ராலலாகே ரவிந்திர குமார பீரிஸ் என்னும் நபர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : என். பத்மசிறியின் காணி:
கிழக்கு : பிரதேச சபை பாதை ஒதுக்கம்;
தெற்கு : ஏ. வீரசிங்கவினுடைய காணி;
மேற்கு : செனவிரத்னவினுடைய காணி.

03. கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரச தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.10.10 ஆம் திகதியிலிருந்து)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீடட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாகப் பேணிக் காத்தல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.10.10 ஆம் தினத்திலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் காணியினைப் பெற்றுக் கோண்ட நோக்கினை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டான துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் தவிர்ந்த ஏனைய துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியானது குத்தகைக்கு வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. டீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
''மிஹிகத மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, சனவரி 19.

02 - 238

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/65967.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NCP/PLC/L02/04/CNP/04 (1).

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

அநுராதபுர மாவட்டம், மத்திய நுவரகம பலாத்த பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 293, பண்டுலகம கிராம அலுவலர் பிரிவின் கொரகஹவெவ கிராமத்தின் காணி உத்தியோத்தர் மூலம் வரையப்பட்ட நில வரைபடத்தின் காணித் துண்டு இலக்கம் 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 01 றூட், 10 பேர்ச் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திருமதி மொனிகா சுவர்ணா பெரேரா குணவர்தன என்னும் நபர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : வை. தலகல ஆராச்சியினுடைய காணி:
கிழக்கு : ராணுவ முகாம் அமைந்துள்ள காணி;
தெற்கு : புத்தளம் அநுராதபுரம் வீதி ஒதுக்கம்;
மேற்கு : வை. தலகல ஆராச்சியினுடைய காணி மற்றும் டீ. ஆர். ஜீ. சிசிர குமாரவினுடைய காணி.

03. கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரச தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.10.10 ஆம் திகதியிலிருந்து 30 வருடங்கள்)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.10.10 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகையானது தொடர்ச்சியாகச் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் செலுத்தப்படாத எஞ்சிய குத்தகைப் பணத்திற்கு 10% தண்டப் பணம் அறிவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியானது குத்தகைக்கு வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, சனவரி 12.

02 - 239

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/65719.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NWP/PLC/L10/WW/LTL/46.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், வண்ணாத்தவில்லு பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 636/1, வண்ணாத்தவில்லு தெற்கு கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த நாகமடுவ கிராமத்தின் திட்ட இல. 08/11/வண்/07 இனது காணித் துண்டு இல. 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 11 ஏக்கர், 03 றூட், 34.4 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணியினை விவசாய வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திரு. மெத்தசிங்ஹ ஆராச்சிகே அந்தனீஸ் எம்மானுவேல் பெர்னாந்து என்பவர் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : P. P. பு. 3749 இனது காணித் துண்டு இல. 05 மற்றும் P. P. பு. 4448 இனது காணித் துண்டு இல. 38:
கிழக்கு : P. P. பு. 4448 இனது காணித் துண்டு இல. 42 (வீதி);
தெற்கு : P. P. பு. 3749 இனது காணித் துண்டு இல. 6 மற்றும் வீதி;
மேற்கு : P. P. பு. 3749 இனது காணித் துண்டு இல. 2 மற்றும் P. P. பு. 3749 இனது காணித் துண்டு இல. 6.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்பட முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரச தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.12.11 இலிருந்து முப்பது வருடங்கள் வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்** .- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2023 ஆம் வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 50% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- வருடாந்த குத்தகைப் பணத்தின் மூன்று மடங்கு ஆகும்.

**தண்டப் பணம்** .- 2023 ஆம் ஆண்டின் அதிகரிக்கப்படாத வாணிபப் பெறுமதியின் 10% ஆகும்.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர், செயற்திட்டத்துடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.12.11 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்கு கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்;

(ஒ) குத்தகையானது தொடர்ச்சியாகச் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் நிலுவைப் பணத்திற்கு 10% தண்டப் பணம் அறவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, சனவரி 11.

02 - 241

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/72084.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NWP/PLC/L10/MD/LTL/06.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், மாதம்பை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 543, குடிருப்புவ கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த கல்முருவ கிராமத்தின் குடியேற்ற அலுவலர் மூலம் வரையப்பட்ட திட்டத்திற்கு அமைய 30 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணியினை கோப்சிட்டி வியாபார நடவடிக்கைகளின் பொருட்டு வரையறுக்கப்பட்ட மாதம்பை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : கல்முருவ வைத்தியசாலை:
கிழக்கு : குறுக்கு வீதி;
தெற்கு : மாதம்பை குளியாபிட்டிய பிரதான வீதி;
மேற்கு : சிலாபம் பெருந்தேட்ட கம்பனி.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்பட முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரச தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2023.12.11 இலிருந்து 2053.10.09 வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2023 ஆம் வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுததப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறிவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை கோப்சிட்டி வியாபார நிலையத்தினை நடாத்திச் செல்வது தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.12.11 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் குத்தகைக்கு பெற்றுக் கொண்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் தவிர்ந்த வேறுவகையான துணைக் குத்தகை செய்யவோ அல்லது கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்;

(ஒ) குத்தகையானது தொடர்ச்சியாகச் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் செலுத்தப்படாத எஞ்சிய குத்தகைப் பணத்திற்கு 10% தண்டப் பணம் அறவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றும் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, சனவரி 11.

02 - 242

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/69027.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NWP/PLC/WP/LTL/22.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வாரியபொல பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 1270, மாமுணுவ கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த மாமுணுவ கிராமத்தின் நில வரைபடம் F. V. P. 2727 இன் துண்டு இலக்கம் 345 இன் ஒரு பகுதியைக் காட்டும் வகையில் குடியேற்ற உத்தியோகத்தர் மூலம் வரையப்பட்ட நில வரைபடத்தின் மூலம் காட்டப்பட்டுள்ள 4.25 பேர்ச் அளவுடைய அரச காணியினை சங்க நடவடிக்கைகளின் பொருட்டு எகொட மாமுணுவ ஐக்கிய வாலிபர் சங்கம் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:**

வடக்கு : F. V. P. 2727 இன் துண்டு இலக்கம் 343, 344 (அரச பாதை):
கிழக்கு : F. V. P. 2727 இன் துண்டு இலக்கம் 348 (அரச பாதை);
தெற்கு : F. V. P. 2727 இன் துண்டு இலக்கம் 347, 346;
மேற்கு : F. V. P. 2727 இன் துண்டு இலக்கம் 345 இந்தக் காணியின் மிகுதிப் பகுதி).

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன்பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.10.10 ஆந் திகதியிலிருந்து 30 வருடங்கள்).

(ஆ) **வருடாந்தக் குத்தகைப் பணம்**.- 2023 ஆம் வருடத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 1/2% ஆகும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறிவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை சங்க நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகைக்காரர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) இந்தக் காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டான துணைக் குத்தகை அல்லது கைமாற்றும் தவிர்ந்த ஏனைய துணைக் குத்தகைகளோ அல்லது கைமாற்றங்களோ செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாகச் செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு விடப்படும்.

எம். எச். ஏ. டீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, சனவரி 17.

02 - 243

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/72156.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NWP/PLC/L9/AL/BA/LTL/03.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பபுணாகொட்டுவ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 1226, வத்துகன கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த கட்டுபொத்த கிராமத்தின் F. V. P. 691 இன் மேலதிக இலக்கம் 11 இன் துண்டு இலக்கம் 142 இன் ஒரு பகுதியைக் காட்டும் வகையில் குடியேற்ற உத்தியோகத்தர் மூலம் வரையப்பட்ட 2022/01 நில வரைபடத்தின் துண்டு இலக்கம் E இன் மூலம் காட்டப்பட்டுள்ள 40 பேர்ச் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு தேசிய நீர் வழங்கல்கள் மற்றும் வடிகாலமைப்பு அதிகார சபையின் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:**

வடக்கு : துண்டு இலக்கம் 141, $100^{A}$ மற்றும் வரைபடத்தின் துண்டு D:
கிழக்கு : துண்டு இலக்கம் D, H மற்றும் G;
தெற்கு : துண்டு இலக்கம் G மற்றும் $102^{A}$;
மேற்கு : $102^{A}$ மற்றும் 141, $100^{A}$.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன்பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.10.10 ஆம் தினத்திலிருந்து 30 வருடங்கள்).

(ஆ) **வருடாந்தக் குத்தகைப் பணம்**.- 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வாரு 05 வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறிவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வேலை அலுவலர்களின் காரியாலயத்தை நிர்மாணிப்பது தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகைக்காரர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.10.10 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகைகளோ அல்லது கைமாற்றங்களோ செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாகச் செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு விடப்படும்.

எம். எச். ஏ. டீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, சனவரி 17.

02 - 244

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/70217.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: PLC/L/12/LP/7/41.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

இரத்தினபுரி மாவட்டம், கொடகவெல பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 236B, பம்பரகஸ்தன்ன கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த பம்பரகஸ்தன்ன கிராமத்தின் நிலவரைபட இல. R/GDK/2017/244 இனது காணித் துண்டு இல. B இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 0.0126 ஹெக்டயர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணியினை அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் சங்க நடவடிக்கைகளின் பொருட்டு சஹன நலன்புரிச் சங்கம் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : துண்டு இலக்கம் இல. A மற்றும் 479:
கிழக்கு : துண்டு இலக்கம் இல. 481;
தெற்கு : துண்டு இலக்கம் இல. C;
மேற்கு : துண்டு இலக்கம் இல. 479.

02. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு அரசினால் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- ஐந்து (05) வருடங்கள் (2023.08.02 ஆம் தினத்திலிருந்து).

**வருடாந்த குத்தகைப் பணம்**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் காணியின் அதிகாரிக்கப்படாத பெறுமதியின் 1/2% ஆகும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை சங்க நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.08.02 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு பெற்றுக் கொண்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் தவிர்ந்த வேறுவகையான துணைக் குத்தகை செய்யவோ அல்லது கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைகேற்ப காணியானது குத்தகைக்கு விடப்படும்.

கே. ஜீ. பீ. சௌமியா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, சனவரி 10.

02 - 363

### *காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்*

*காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/73985.*
*மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.:* UPLC/L/13/ BW/L/501.

### *அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*பதுளை மாவட்டம், பண்டாரவெல பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 70, கெபில்லவெல தெற்கு கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த கெபில்லவெல கிராமத்தின்* B/BND/2012/071 *இலக்க நில வரைபடத்தின் காணித் துண்டு இலக்கம்* A *இன் மூலம் காட்டப்பட்டுள்ள 0.1047 ஹெக்டயர் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு வரையறுக்கப்பட்ட பண்டாரவெல பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:*
*வடக்கு : பாதை ஒதுக்கம்:*
*கிழக்கு : ஏ. அஜித் அனுபவிக்கும் காணி;*
*தெற்கு : அரச காணி;*
*மேற்கு : அரச காணி.*

*கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.*

*(அ)* ***குத்தகைக் காலம்*** *.- முப்பது வருடங்கள் (2023.11.15 ஆம் தினத்திலிருந்து 2053.11.14 வரை).*

*(ஆ)* ***வருடாந்த குத்தகைப் பணம்.-*** *2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.000) குறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வாரு 05 வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.*

***தவணைக் கட்டணம்*** *.- தவணைக் கட்டணம் அறிவிடப்பட மாட்டாது.*

*(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;*

*(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதி மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;*

*(உ) மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;*

*(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவுள்ள கட்டடங்களை முறையாகப் பேணிப் பாதுகாத்தல் வேண்டும்;*

*(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;*

*(ஏ) 2023.11.15 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்ய அனுமதி வழங்கப்படமாட்டாது;*

*(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகைப் பணத்தைத் தொடர்ச்சியாக செலுத்தாத சந்தர்ப்பத்தில் மிகுதியாகக் காணப்படும் நிலுவைப் பணத்தின் பொருட்டு 10% தண்டப் பணம் அறவிடப்படும்.*

*வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு விடப்படும்.*

*எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம் சமரதுங்க,*
*உதவிக் காணி ஆணையாளர்,*
*காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.*

*காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,*
*"மிஹிகத மெதுர",*
*காணிச் செயலகம்,*
*இல. 1200/6,*
*ரஜமல்வத்த வீதி,*
*பத்தரமுல்லை,*
*2024, சனவரி 05.*

*02 - 364*

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/67247.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: UPLC/L/26/KG/L/250.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மொனராகலை மாவட்டம், கதிர்காமம் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 146 கதிர்காமம் கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த காமிணிபுர கிராமத்தில் அமையப் பெற்றிருக்கும் குடியேற்ற அலுவலர் மூலம் அளந்து தயார்படுத்தப்பட்ட UVA/MO/KTG/146/LTL/COM/251 இலக்க அண்ணவான வரைபடத்தின் துண்டு இலக்கம் A இன் மூலம் காட்டப்பட்டுள்ள 01 ஏக்கர், 00 றூட், 00 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித் துண்டினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திரு. ஏக்கநாயக்க முதியன்சேலாகே கந்தேவலவ்வே அபேகுணதிலக்க பண்டா கரலியத்த என்பவர் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பாதை மற்றும் எச். கே. ஏ. பியதாசவினுடைய காணி:
கிழக்கு : பாதை;
தெற்கு : பாதை மற்றும் எஸ். எல். எம். ஆர். சமரதுங்கவினுடைய காணி;
மேற்கு : எச். கே. ஏ. பியதாச மற்றும் எஸ். எல். எம். ஆர். சமரதுங்கவினுடைய காணி.

கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.11.15 ஆம் தினத்திலிருந்து 2053.11.14 ஆம் திகதி வரை).

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2 ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாகப் பேணிப் பாதுகாத்தல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.11.15 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு விடப்படும்.

எம். எச். ஏ. டீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதானச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, சனவரி 09.

02 - 240